சார்பு நீதிமன்றம், மன்னார்குடி

OS 94/2021

16.04.2026.

DW - 2

பி.வா.சா.2. முருகேசன், த/பெ.குமரன் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை. பிரதிவாதி அழைத்ததன் பேரில் வந்தேன். எனக்கு தமிழ் படிக்க தெரியாது. நான் தாக்கல் செய்த நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை வழக்கறிஞர் படித்து காட்டினார். நிருபண வாக்குமூலத்தில், மோகன் இடத்தை நான் குத்தகை சாகுபடி செய்வதாக சொல்லியுள்ளேன். அந்த நிலத்தின் சர்வே எண், விஸ்தீரணம் சொல்லவில்லை என்றால் - சரிதான். குத்தகை சாகுபடி செய்தவற்கான வருவாய் துறையில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் - இல்லை. எத்தனை ஆண்டு காலமாக சாகுபடி செய்து வருகிறேன் என்றால் - 30 ஆண்டுகளுக்கு மேல் இருக்கும். குத்தகைக்கான பதிவுகள் இல்லை என்றால் - சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் - சரிதான். வழக்கு சொத்து இருக்கும் இடத்திற்கும் எனது வீட்டிற்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் - 2 கி.மீ இருக்கும். நான் குத்தகை சாகுபடி எதுவும் செய்யவில்லை என்றும் அதனால் தான் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றாலும் - சரியல்ல. தாவா நிலம் எங்குள்ளது எனக்கு தெரியாது என்றாலும் ரவி அழைத்ததால் தான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் - சரியல்ல. எனது நிருபண வாக்குமூலத்தில் தாவா நிலத்தின் நான்கெல்லை விவரம் சொல்லவில்லை என்றால் - சரிதான். பிரதிவாதி ரவி எனக்கு முதலாளி என்றால் - இல்லை. ரவி எனது முதலாளி என்பதால் தான் அவருக்கு சாதகமாக நீதிமன்றத்தில் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் - சரியல்ல. 30 ஆண்டுகளுக்கு மேல் நான் சாகுபடி செய்தால் சாகுபடி குத்தகைதாரராக பதிவு செய்திருப்பேன் என்றாலும் நான் அவ்வாறு எந்த நிலத்தையும் சாகுபடி செய்யவில்லை என்றாலும் - சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி
மன்னார்குடி.